**Deposition of Witness**
**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 417/2022

எ.ம.சா2 முத்துக்குமார்

| | | |
|---|---|---|
| Name | : | முத்துக்குமார் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 12.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் என் நிறுவனம் சார்பாக என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. TN.67.AP.7268 என்ற லோடு ஆட்டோவின் காப்பீடு சான்று எ.ம.சா.ஆ1

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து சமயம் TN.67.AP.7268 என்ற வாகனமானது முழுகாப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் இல்லை. விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு காரணம் என்பதாலும், அவர் ஒட்டிசென்ற வாகனம் எங்களது காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் எங்களது நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. முதல் விசாரணை

வாக்குமூலத்தில் இழப்பீடு கொடுக்ககூடாது என்பதற்காக பொய்யான விபரங்களை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாருக்கு இழப்பீடு கொடுக்ககூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி